# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
# WORLD TAMIL RESEARCH ASSOCIATION

**EXECUTIVE COMMITTEE**

**PRESIDENT**
Tan Sri Prof.Dr.T. Marimuthu

**VICE-PRESIDENTS**
Dr. M. Ponnavaikko (India)
Dr. Jean-Luc Chevillard (France)
Dr. Martha Selby (USA)

**SECRETARIES-GENERAL**
Dr.SP.Thinnappan (Singapore)
Dr. Francis Muthu (USA)
Dr.Ulaganayaki Palani (India)

**TREASURER**
R. Muthukumarasamy (India)
Tiroumale Chetty (Mauritius)

**CO-ORDINATOR**
Dr.P. Maruda Nayagam (India)

## கூட்டக்குறிப்புகள்

**நாள்; 23.06.2016**

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றச் செயல்பாடுகள் பற்றியும் மன்றத்தின் 10-வது மாநாடு பற்றியும் வட அமெரிக்கத் தமிழ்ப்பேரவை உறுப்பினர் கள், தமிழ்நாடு அறக்கட்டளை உறுப்பினர்கள், சிக்காகோ தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், தமிழ்ப்பள்ளி நிறுவனர்கள், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற செயற்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களுடன் நடைபெற்ற கூட்டக்குறிப்புகள்

Minutes of the meeting held with FETNA, , Chicago Thamizh Sangam and ,TNF officials, EC members of the World Tamil Research Association (WTRA) and ChicagoTamil school owner and other Thamizh enthusiasts on 19th June at Chicago, in respect of the activities of WTRA and on the conduct of the 10th International Tamil Research Conference of WTRA.

பங்குபெற்ற உறுப்பினர்கள் - Members Present:

1. V.S.Babu annaiillam2004@yahoo.com 708 432 6284
2. Socrates Ponnusamy socratesponnusamy@yahoo.com 847 571 4287
3. Anand S.Anandan lanandan@yahoo.com 847 991 3452
4. Lakshmi Anandan lakshmi6.anandan@gmail.com 847 858 2370
5. Palani Aravazhi pkaravazhi@yahoo.com 630 430 2158
6. Veera Venugopal nishnik@hotmail.com 847 910 3684
7. Mani Gunasekaran mani_til@yahoo.com 815 545 0791
8. Regina Muthu regie.muthu@gmail.com 847 769 1208
9. Francis Savari Muthu fsmuthuiitcc@gmal.com 847 298 1275
10. M.Ponnavaikko ponnav@gmail.com 011918939816001

**EXECUTIVE COMMITTEE OFFICE :** No. 552, TTK Road, Alwarpet, Chennai – 600 018, Tamilnadu, India
**REGISTERED OFFICE:** 2/255, 3rd Street, Kurunji Nagar, Anna Street, Vandalur, Chennai – 600 048, Tamilnadu, India.

கலந்தாய்வு செய்த பொருள்கள் - Points discussed:

1. முனைவர் ஃப்ரான்சிசு முத்து அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் துணைத்தலைவர் முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்களை அறிமுகப்படுத்தி அவரது வருகைப்பற்றியும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை சிக்காகோவில் நடத்த வட அமெரிக்கத் தமிழ்ப்பேரவையும் சிக்காகோ பல்கலைக்கழகமும், சிக்காகோ தமிழ்ச்சங்கமும் முன்வந்துள்ள செய்தியையும் கூறி இது தொடர்பாக தனது கருத்தை வழங்குமாறு பொன்னவைக்கோவைக் கேட்டுக்கொண்டார்.

2. முனைவர் மு.பொன்னவைக்கோ, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தொடக்கம், அதன் செயல்பாடுகள் மற்றும் மன்றத்தின் 10-வது மாநாடு ஆகியவை பற்றி கீழ்க்கண்டவாறு அறிமுகப்படுத்தினார்.

3. **உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தொடக்கம்**;

18-ம் நூற்றாண்டு முதலே ஐரோப்பியர்களின் கவனமும் நடவடிக்கைகளும் கல்கத்தா பற்றியே இருந்ததால் தமிழ்நாடு பற்றிய உணர்வு அவர்களுக்குத் தோன்றவே இல்லை. மேலும் தனித்த பெருமை கொண்டது மட்டு மல்லாமல் சமஸ்கிருதத்தையும் சிறப்பித்த தமிழ்மொழி, ஆரிய-திராவிட நாகரிகங்களின் இணைப்புப் பாலமாக இருந்ததனை அறியாமல் இந்தி, வங்காளம், பஞ்சாபி, மராத்தி போன்ற மாகாண மொழிகளுள் ஒன்று மட்டுமே என்று தான் பிறநாட்டு மொழி ஆராய்ச்சியாளர் தவறாகக் கருதிக் கொண்டிருந்தனர்.

உலக நாடுகளில் உள்ள அனைத்து அறிஞர்களும் ஒன்று கூட வேண்டும் என்ற நோக்கில் கீழை நாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்கள் பலரும் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை கூடி புதிய ஆய்வுகள் பற்றிய சிந்தனைகளைப் பரிமாறிக் கொண்டனர். இவ்வமைப்பு கீழை நாட்டாய்வாளர்களின் பன்னாட்டு ஒன்றியம் என்ற பெயரில் நடைபெற்று வந்தது. இதிலும் தமிழ்மொழி பற்றிய ஆய்வு மிகக் குறைவாகவே இடம்பெற்றது.

இத்தகு குறைபாடுகளைப் போக்கி தமிழ்மொழிக்கு உலகளாவிய அளவில் உலகக் கவனிப்பை உருவாக்க வேண்டுமென்று தமிழ் அறிஞர்கள் முனைந்தனர். இதனை ஏற்று நடத்த ஓர் அமைப்பு தேவையென்பதை அவர்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக 7.1.1964-ல் புதுடெல்லியில் கீழ்த் திசையறிஞர்களின் மாநாடு கூடியபோது தவத்திரு தனிநாயகம் அடிகளார் "உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' என்ற ஒன்றினை திருவாளர்கள் ஏ.சுப்பையா,

பிலியோசர், பர்ரோ, எமனோ, கூப்பர், சுவலெபிஸ் போன்றோர் உதவியுடன் கீழ்க்காணும் நோக்கங்களுடன் தொடங்கினார்.

**மன்றத்தின் நோக்கம்**

உலகம் முழுவதும் தமிழ் ஆய்வை மேற்கொண்டு, சிதறிக் கிடக்கின்ற சிறு நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துதல், தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பொதுவானவற்றைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், பிறநாடுகள் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பாடமாக அமைத்தல், அப்பல்கலைக்கழகப் பேராசிரியர்களைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடச் செய்தல், தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழிலக்கியம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றைப் பற்றி பல்கலைத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் இம்மன்றம் செயல்படத் தொடங்கியது.

உலகிலுள்ள அறிஞர் பலரை ஒன்று சேர்த்து, அவர்களை அறிமுகப்படுத்தி, அவர்களது ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த உதவுவதும் வகையில் இரண்டாண்டுகட்கு ஒருமுறை "உலகத் தமிழ் மாநாடு' நடத்த இம்மன்றம் முடிவு செய்து, மாநாடு நடத்தவிரும்பும் நாடுகள் இம்மன்றத்தின் ஒத்துழைப்புடன் மாநாடுகளைச் சிறப்புற நடத்த வழி செய்தது. இம்மன்றத்தின் முதல் உலகத் தமிழ் மாநாடு 1966-ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடத்தப்பெற்றது.

இதுவரை 9 மாநாடுகள் நடந்த விவரங்கள்;

i. முதல் மாநாடு கோலாலம்பூரிலே 1966 ஏப்ரல் 16-23 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.
ii. இரண்டாவது மாநாடு இரண்டு ஆண்டுகள் கழித்து 1968 ஆம் ஆண்டு சனவரி 3-10ஆம் நாட்களில் சி.என்.அண்ணாத்துரை தலைமையில் தமிழக அரசின் உதவியுடன் சென்னையில் நடத்தப்பட்டது..
iii. மூன்றாவது மாநாடு இரண்டு ஆண்டுகள் கழித்து 1970 ஆம் ஆண்டு சனவரி 15-18ஆம் நாட்களில் பாரிசு நகரல் பாரிசு பல்கலைக் கழகத்தில் பேரா. ஜீன் பிலியோசா நடத்தினார்..
iv. நான்காவது மாநாடு நான்கு ஆண்டுகள் கழித்து 1974 ஆம் ஆண்டு சனவரி 3-9 ஆம் நாட்களில் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் பல்லைக்கழகத்தில் திரு வித்யானந்தன் நடத்தினார்.

v. ஐந்தாவது மாநாடு ஏழு ஆண்டுகள் கழித்து 1981 ஆம் ஆண்டு சனவரி 4-10ஆம் நாட்களில் மதுரையில் தமிழக அரசின் .உதவியுடன் நடத்தப்பட்டது.

vi. ஆறாவது மாநாடு ஆறு ஆண்டுகள் கழித்து 1987 ஆம் ஆண்டு நவம்பர் 15-19 ஆம் நாட்களில் கோலாலம்பூரில் நடந்தது.

vii. ஏழாவது மாநாடு இரண்டு ஆண்டுகள் கழித்து 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 1-8 ஆம் நாட்களில் ஆப்பிரிக்காவில் மொரீசியசில் நடந்தது.

viii. எட்டாவது மாநாடு ஆறு ஆண்டுகள் கழித்து 1995 ஆம் ஆண்டு சனவரி 1-5 ஆம் நாட்களில் தஞ்சாவூரில் நடந்தது.

ix. ஒன்பதாவது மாநாடு இருபது ஆண்டுகள் கழித்து 2015 ஆம் ஆண்டு சனவரி 29 முதல் பிப்ரவரி 1 வரை மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது.

4. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கிய காலந்தொட்டு 2016 வரை 52 ஆண்டுகளில் திட்டப்படி 26 மாநாடுகள் நடந்திருக்க வேண்டியதற்குப் பதிலாக 9 மாநாடுகள் மட்டுமே நடைபெற்றுள்ளன என்பதை வருத்தத்தோடு கூறி அதற்கான காரணங்களை விவரித்தார்.

i. இந்த மன்றம் தொடங்கி 52 ஆண்டுகளாகியும் எங்கும் பதிவு செய்யப் படவில்லை.

ii. இந்த மன்றத்திற் கென்று நிதி இல்லை.

iii. இந்த மன்றத்திற்கு வங்கிக் கணக்கில்லை.

iv. நிதி இல்லாமையால் இதுவரை நடைபெற்ற ஒவ்வொரு மாநாடும் ஏதோ ஒரு நாட்டு அரசையோ அல்லது பல்கலைக் கழகத்தையோ நம்பிதான் நடத்த வேண்டி இருந்தது.

v. இந்த மன்றத்திற்கு நியமிக்கப்பட்ட செயற்குழு உறுப்பிர்களைத் தவிர வேறு உறுப்பினர்கள் இல்லை.

vi. மன்றத்திற்கென நிதி இல்லாமையால் மேலே குறிப்பிட்ட மன்றத்தின் நோக்கங்கள் எதையும் செயற்படுத்த இயலவில்லை.

vii. தஞ்சாவூரில் நடைபெற்ற. எட்டாவது மாநாட்டில் வெளியிட்ட 1000 மலர்களில் அன்பளிப்பாக வழங்கிய 130 மலர்கள் போக, நூலகங்களுக்கு வழங்கிய 870 மலர்களுக்கான தொகையாகிய ரூ.12.18 இலட்சத்தை வாங்கிக்கொள்ள மன்றத்திற்கு வங்கிக் கணக்கில்லை. எனவே அந்தப் பணம் தமிழக அரசின் உலகத் தமிழ் நிறுவனத்திடம் (International Institute of Tamil Studies) ஒப்படைக்கப் பட்டுள்ளது.

viii. இந்த நிலைமையை அறிந்த நான் இம்மன்றத்தின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டவுடன், இம்மன்றத்தை பதிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன். Society Act -இன் கீழ் பதிவு செய்தால் மன்றத்தில் வெளிநாட்டு உறுப்பினர்கள் சேர முடியாது என்பது இப்போதைய விதி. எனவே Company Act-இல் Not for Profit Company யாக பதிவு செய்ய முயன்றபோது மன்றதின் பெயரில் International என்னும் சொல் இருக்கக்கூடாது என்றனர். எனவே International என்னும் சொல்லிற்குப் பதிலாக World என்னும் சொல்லைப் பயன்படுத்தி World Tamil Research Association (WTRA) என்ற பெயரில் இந்த மன்றம் இப்பொழுது பதிவு செய்யப்பட்டுள்ளது.

ix. இந்த மன்றத்திற்கு World Tamil Research Association (WTRA) என்ற பெயரில் வங்கிக் கணக்குத் தொடங்க PAN எண்ணிற்கு விண்ணப்பித் துள்ளோம். இன்னும் ஓரிரு கிழமைகளுக்குள் வங்கிக் கணக்குத் தொடங்கி தமிழக அரசின் உலகத் தமிழ் நிறுவனத்திடம் (International Institute of Tamil Studies) ஒப்படைக்கப் பட்டுள்ள ரூ.12.18 யை வாங்கிவிடுவோம்..

x. World Tamil Research Association-இன் பதிவாணை, விதிமுறைகள் ஆகியவை, இணைப்புகள் 1 & 2 -இல் கொடுக்கப்பட்டுள்ளன.

xi. மன்றத்தின் செயற்பாடுகளை மேற்கொண்டு எடுத்துச்செல்ல மன்றத்தில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். அப்பொழுதுதான் மன்றம் வலுப்பெறும். தனிநாயக அடிகளாரின் கனவு நனவாகும்.

xii. மன்றத்தில் உறுப்பினர்களை சேர்க்க புதிய விதிமுறைகளில் உறுப்பினர் கட்டண விவரங்கள் கீழ்க்காணுமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

xiii. **2. a.**The subscribers to the memorandum and such other persons as the Board shall admit to membership shall be members of the company.
**b.**The members shall pay the following annual subscriptions.

(i) Annual subscription for individual Rs.1000
(ii) Annual subscription of institution Rs.3000

Life membership fee
(iii) for individual Rs.10,000
(iv) for institution Rs.30,000

5. கூட்டத்தில் பங்குபெற்ற அன்பர்கள் தனி உறுப்பினர் வாழ்நாள் கட்டணத்தை அமெரக்க 250 டாலராக டாலரில் வைக்கலாம் என்று பரிந்துரைத்தனர். கூட்டத்தில் பங்குபெற்ற அனைவரும் உறுப்பினராகச் சேர விருப்பம் தெரிவித்தனர். திரு.சாக்ரட்டீசு, திரு வ.ச.பாபு ஆகிய இருவரும் 250 க்கான காசோலைகளை வாழ்நாள் உறுப்பினராவதற்கு செலுத்தினர்.

மற்றவர்கள் கட்டணத்தை நேரடியாக இணையவழி மன்றத்தின் வங்கிக்கணக்கில் கட்டுவதாக உறுதியளித்தனர்.

வட அமெரிக்க தமிழ்ப் பேரவையிலிருந்து கூட்டத்தில் பங்குபெற்ற நண்பர்கள் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கங்களை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் நிறுவன உறுப்பினர்களாகச் சேர்க்க சங்கப் பொறுப்பாளர்களிடம் கலந்து பேசிய பிறகு தெரிவிப்பதாகக் கூறினர்.

6. தமிழ் இருக்கைகளைக் கொண்டுள்ள அமெரிக்கப்பல்கலைக் கழகங்களும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்ற நிறுவன உறுப்பினர்களாகச் சேர முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் இந்தியாவில் உள்ள தமிழ்ச்சங்கங்களையும் தமிழ்த்துறைகளைக் கொண்ட பல்கலைக் கழகங்களையும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்ற நிறுவன உறுப்பினர்களாகச் சேர்க்க தான் முயற்சி எடுத்து வருவதாகவும் முனைவர் பொன்னவைக்கோ கூறினார்.

7. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 10-வது மாநாடு சிக்காகோவில் நடைபெற வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப்பேரவையும் சிக்காகோ பல்கலைக்கழகமும் உதவி செய்ய முன்வந்துள்ள அமைப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்த முனைவர் பொன்னவைக்கோ சங்க இலக்கியங்களில் சமற்கிருத ஆதிக்கத்தால் ஏற்பட்டுள்ள இடைச்செறுகல்களால் சங்க இலக்கியங்களின் சிறப்பும் பழமையும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக் கூறி அவற்றையெல்லாம் களைந்து உலகிற்கு உண்மையை எடுத்துரைப்பதாக இம்மாநாடு அமையவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இம்மாநாட்டின் கருத்தரங்க கருப்பொருள்கள் கீழ்க்காணும் பொருள்களில் இருத்தல் நல்லது என்றார்;

    i. சங்க இலக்கியங்களில் இடைச் செறுகல்கள்
    ii. உலக மொழிகளில் தமிழ்
    iii. உலகப் பண்பாடுகளில் தமிழர் பண்பாடு
    iv. உலகச் சமயங்களின் தொடக்கம் சைவம்
    v. உலக மலைமொழிகளும் தமிழும்
    vi. பிற மொழிகளில் சங்க இலக்கியங்களின் மொழியாக்கம்.

8. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பணிகளில் உடனடி எடுத்துச்செய்ய வேண்டிய பணிகளாக கீழ்க்காணும் பணிகளைக் குறிப்பிட்டார்;

    i. சங்க இலக்கியங்களிலிருந்து இடைச்செறகல்களை நீக்கி செம்பதிப்பு களாகப் பதிப்பித்தல்.
    ii. தனி நபர் உறுப்பினர்களையும் நிறுவன உறுப்பினர்களையும் சேர்த்தல்
    iii. பல்வேறு நாடுகளில் உ த ஆ மன்றத்தின் கிளைகளை நிறுவுதல்

iv. உ த ஆ மன்ற ஆய்விதழ் வெளியிடல்.

v. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு நிதிய மூலதனம் (corpus fund) உருவாக்கல்.

9. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கருத்தரங்கம் மன்றத்தின் விதிமுறைகளுக்குள் எப்படி நடக்கவேண்டும் என்பதை உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழு திட்டமிடும் அதனை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு வட அமெரிக்கத் தமிழ்ப்பேரவை மற்றும் சிக்காகோ பல்கலைக்கழகம் ஆகியவற்றைச்சாரும் என்றார். உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுச்செயலாளர் முனைவர் ஃப்ரான்சிசு முத்து அவர்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார் என்றார்.

**10.** உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் 10-வது கருத்தரங்கத்தின் ஒருங்கிணைப்பக்குழு கீழ்க்கண்டவாறு இருக்கலாம் என்று ஒரு வரைவு பரிந்துரைக்கப்படுகின்றது. இக்குழுவில் பணியாற்ற யார் யாரை நியமிப்பது எனபதை அந்தந்த அமைப்புகள் முடிவு செய்யலாம்.

**Suggeted Structure of the Organization Committee**

**A. Main Committee**
- **i. Chair : Univ. of Chicago (UC)**
- **ii. Secretaries : WTRA and FETNA**
- **iii. Treasurer : WTRA**

**B. Program Committee**
- **I. Academic Committee**
  - **i. Identifying Scholars and inviting Research papers and selection of Research papers for presentation in the conference : UC and WTRA**
  - **ii. Printing of the Proceeding of the Conference UC & WTRA**
- **II. Fund Raising Committee**
  - **i. Sponsorship by FETNA**
  - **ii. Mobilization of Sponsorship by WTRA**
  - **iii. Mobilization of Sponsorship by UC**
- **III. Coordinating Committee for the conduct of the Sessions**
  - **i. Organization of Facilities : FETNA**
  - **ii. Fixing of Session Chairs : WTRA and UC**
  - **iii. Facilitation of Sessions : UC, WTRA and FETNA**

**C. Any Other Committee, if required.**

மு.பொன்னவைக்கோ